# அவசரகால நிலைமை தொடர்பாக விளங்கிக் கொள்ளுதல்: ஏப்ரல் 2019

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, நாட்டில் நிலவுகின்ற பாதுகாப்புத் தேவையினைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏப்ரல் 23 ஆம் திகதி அவசர கால நிலைமையினைப் பிரகடனப்படுத்தினார். அத்துடன் அரசாங்கத்தினால் கோரப்பட்டவாறு விசேடமான அதிகாரங்களை வழங்குகின்ற விரிவான அவசரகால ஒழுங்குவிதிகள் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது. தற்போது வலுவிலிருக்கின்ற அவசரகால நிலையினை, அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சியில் தாக்கத்தினை செலுத்துகின்ற பிரதான அவசரகால ஒழுங்குவிதிகளின் பிரதான ஏற்பாடுகளை புரிந்து கொள்வதனை இலகுவாக்கும்பொருட்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இச் சிறிய ஆவணத்தினைத் தயாரித்துள்ளது.

## பகுதி I- அவசரகால நிலைமை

### 1. ‘அவசரகால நிலை’ என்றால் என்ன?

பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமானது அவசரகாலம் என்பதனை விதிவிலக்கான அச்சுறுத்தல், ஆபத்து அல்லது அனர்த்தம் தெளிவானதாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பம் எனக் கூறுகின்றது. இச்சந்தர்ப்பங்களில், அச்சுறுத்தலைக் கையாளும் பொருட்டு, சாதாரண சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படாத விசேட அதிகாரங்கள் அரசாங்கத்திற்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பமானது, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் என்பனவற்றை பேணும்பொருட்டு அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதியினை அனுமதிக்கின்றது.

### 2. “அவசரகால நிலைமையினைப்” பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரம் எங்கிருந்து வருகின்றது, மற்றும் யார் அதனைப் பிரகடனப்படுத்த இயலும்?

பிரகடனமொன்றின் வாயிலாக அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்துவதற்கான பிரத்தியேக அதிகாரம் ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது (அரசியலமைப்பு உறுப்புரை 155). இப்பிரகடனமானது பாராளுமன்றத்திற்கு அறியப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றமானது அந்த நோக்கத்திற்காக கூட்டப்படுதல் வேண்டும். அவசரகால நிலை பிரகடனத்தினை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது. அவசரகால நிலைமையின் பிரகடனமானது, அவசாரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் உள்ளடங்கலாக பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்பாட்டிற்கு கொண்டுவரும். இவை அரசியலமைப்பினைத் தவிர்ந்த ஏனைய அனைத்து சட்டங்களையும் விஞ்சிச் செயற்படும்.

### 3. அவசரகால நிலைமை எவ்வளவு காலத்திற்கு வலுவிலிருக்கலாம்?

ஜனாதிபதி ஒருமாத காலப்பகுதிக்கு வலுவிலிருக்கக்கூடிய வகையில் அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்தலாம் (ஒருமாத காலப்பகுதிக்கு முன்னரேயே அவசரகால நிலைமையினை இரத்து செய்யவும் முடியும்). இப்பிரகடனத்தினைப் பாராளுமன்றமானது 14 நாட்களுக்குள் அனுமதிக்க வேண்டும். இல்லாவிடின் அப்பிரகடனம் வலிதற்றதாகும். அவசரகால நிலைமையானது முப்பது நாட்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் மாத்திரம் நீட்டிக்கப்பட இயலும். பாராளுமன்றமானது ஏப்ரல் 24 ஆம் திகதி அவசரகால ஒழுங்குவிதிகளை வாக்கெடுப்பின்றி ஒருமாத காலத்திற்கு அனுமதித்தது.

## 4. பிரஜைகளின் உரிமைகளில் அவசரகால ஒழுங்குவிதிகள் கொண்டுள்ள தாக்கங்கள் யாவை?

அவசரகால ஒழுங்குவிதிகளானவை அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் வேறு சட்டங்களிலிருந்து உருவாகின்ற ஏனைய சில உரிமைகள் என்பனவற்றின்மீது மட்டுப்பாடுகளை விதிக்கலாம். விதிக்கப்படுகின்ற மட்டுப்பாடுகள் தடுக்கப்படவேண்டிய தீங்கின் அளவிற்கு அமைவாகக் காணப்படுதல் வேண்டும் என்ற எவ்வித அரசியலமைப்புத் தேவைப்பாடும் இல்லை. அது முழுமையாக பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய நிறைவேற்றுத்துறையின் நல்லெண்ணத்தில் தங்கியுள்ளது.

மட்டுப்படுத்தப்படக்கூடிய அடிப்படை உரிமைகளாவன:

- குற்றமற்றவர் என்பதற்கான ஊகம்;
- நிரூபிப்பதற்கான சுமை மற்றும் பின்னோக்கியாளுகின்ற குற்றவியல் தண்டனைகள்;
- சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம் மற்றும் ஓரங்கட்டாமை;
- கைது செய்வதற்கான சாதாரண செயல்முறை மற்றும் தடுத்துவைப்பதற்கான நீதிமுறை அனுமதி;
- கருத்து தெரிவிப்பதற்கான, ஒன்று கூடுவதற்கான, ஒருங்கு சேருவதற்கான, நடமாடுவதற்கான, தொழில்புரிவதற்கான, மதத்திற்கான, கலாசாரத்திற்கான மற்றும் மொழிக்கான அடிப்படை உரிமைகள்

அவசரகால ஒழுங்குவிதிகளால் மட்டுப்படுத்தப்பட முடியாத உரிமைகள்:

- சிந்திப்பதற்கான மற்றும் மனசாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம்;
- சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம்;
- தகைமையுடைய நீதிமன்றமொன்றில் நீதியான விளக்கமொன்றினூடாகக் கேட்கப்படுவதற்கான உரிமை (இது அவசரகால ஒழுங்குவிதிகளினால் விதிக்கத்தக்க விளக்கத்திற்கு முந்தைய தடுத்து வைத்தலினை விலக்களிக்கின்றது)

அவசரகால அதிகாரங்களுக்கு அப்பால், அரசாங்கத்திற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு கீழான அதிகாரங்களும் காணப்படுகின்றன. பயங்கரவாதத்திற்கு எதிரான இவ் அதிகாரங்கள் விரிவானவை ஆகும். அத்துடன் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்துவதனைப் போல இவ் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியினைத் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

## பகுதி II- அவசரகால ஒழுங்குவிதிகள்

## 5. 21ம் திகதி ஏப்ரல் 2019 தாக்குதல்களைத் தொடர்ந்து வர்த்தமானியில் இடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் யாவை?

- **வர்த்தமானி இல 2120/3** - பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இனை வேண்டிய ஜனாதிபதியின் பிரகடனம்.
- **வர்த்தமானி இல 2120/4** - குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் பொது ஒழுங்கினை பேணுவதற்காக ஆயுதப்படைகளை அழைத்தல் (பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12).
- **வர்த்தமானி இல 2120/5** - பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன்கீழ் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட பிரகடனம்.

## 6. அவசரகால ஒழுங்குவிதிகள் சாதாரண பிரஜைகள் மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன?

வலுவிலிருக்கின்ற அவசரகால ஒழுங்குவிதிகளினால் பயங்கரவாதத்தில் ஈடுபடாத மற்றும் சந்தேக நபர்களல்லாத சாதாரண பிரஜைகளுடைய நாளாந்த வாழ்க்கை பாதிப்பிற்குள்ளாகின்ற பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இது பிரஜைகள் எவ்வாறு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள் என்பதனையும் உள்ளடக்கும்.

- ஒரு நபர் குடிகொண்டுள்ள கட்டிடம் அல்லது வளாகமானது ஒழுங்குவிதிகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றிற்கு அல்லது அக்குற்றத்துடன் தொடர்புடைய விடயமொன்றிற்கு பயன்படுத்தப்பட்டிருக்குமாயின், அங்கு குடி கொண்டுள்ளவர்களை அப்பிரதேசத்தின் பொலிஸ் கண்காணிப்பாளர் (Superintend of Police) வெளியகற்றலாம். அவ்வாறு இடம்பெறுமாயின், குறிப்பிட்ட கட்டிடத்தை விடுவிக்கக்கோரி நீங்கள் மேல் நீதிமன்றத்திற்கு மனுவொன்றினை சமர்ப்பிக்கலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவ்வாளகம் உரிமையாளருக்கு ஆறு மாத காலங்களுக்குள் மீளளிக்கப்படுதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 8)**

- தகைமை வாய்ந்த அதிகாரிகள் (இச்சந்தர்ப்பத்தில் ஆயுதப் படைகளின் தளபதி, பொலிஸ்மா அதிபர் அல்லது மாவட்ட செயலாளர்) ஆகியோர் அவ்வாறு செய்தல் தேசிய பாதுகாப்பிற்கு, பொது ஒழுங்கைப் பேணுவதற்கு அல்லது சமுதாயங்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகள் மற்றும் விநியோகங்களைப் பேணுவதற்கு அவசியமானது அல்லது உகந்தது என கருதுகின்றபோது இலங்கையிலுள்ள எந்தவொரு வாகனத்தினையும் கோரிப் பெற்றுக் கொள்வதற்கு இயலும். அத்துடன் குறிப்பிட்ட வாகனம் மேற்படி ஆணை வழங்கப்படும் வரையில் குறிப்பிட்ட வளாகத்தினைவிட்டு வெளியகற்றப்படக்கூடாது எனவும் தகைமை வாய்ந்த அதிகாரிகள் பணித்தற்கு இயலும். **(ஒழுங்குவிதி 9)**

- ஜனாதிபதியினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் உதவியொன்றாக அல்லது தேசிய பாதுகாப்பிற்காக அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்காக எந்தவொரு நபரும் குறிப்பிட்ட பணியினைச் செய்யும்படி அல்லது குறிப்பிட்ட சேவையினை ஆற்றும்படி தேவைப்படுத்தப்படலாம். அவ்வாறு செய்யத் தவறுகின்றமை குற்றமொன்றாகும். **(ஒழுங்குவிதி 10)**

- அத்தகைய முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென தகைமைவாய்ந்த அதிகாரிகள் கருதுகின்றபோது, அதிகாரமளிக்கப்படாத நபர்கள் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள், இடங்கள் அல்லது வளாகங்களுக்குள் நுழைதலிலிருந்து தடுக்கப்படலாம். அவ்வாறு ஒரு நபர் அத்தகைய இடமொன்றினுள் நுழையும்போது அவர்கள் அவ்விடத்திலிருந்து நீக்கப்படலாம். **(ஒழுங்குவிதி 12)**

- பொது ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்துவதனை ஜனாதிபதி கட்டளையொன்றினூடாக தடுப்பதற்கு இயலும். எவ்வாறெனினும், அதே கட்டளையினூடாக அல்லது அதற்கு பின்னரான கட்டளையொன்றினூடாக அதற்கான விதிவிலக்குகளை வழங்குவதற்கு இயலும். அத்துடன் ஜனாதிபதி தனது அபிப்பிராயத்தின்படி பொது ஒழுங்கிற்கு இடைஞ்சலாக இருக்குமென எண்ணுகின்ற அல்லது அதிருப்தியின்மையினை ஊக்குவிக்கின்ற பொது

ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களைத் தடுப்பதற்கான வழிகாட்டியினையும் வழங்கலாம். **(ஒழுங்குவிதி 13)**

- ஜனாதிபதி, நபர்கள் எந்தவொரு பொது பாதை, புகையிரத நிலையம், பொது பூங்கா, பொழுதுபோக்கு அமைவிடங்கள் அல்லது வேறேதேனும் இடங்கள் அல்லது குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள் அல்லது வளாகங்களில் இருக்கக்கூடாது என, வழிநடத்துகின்ற ஊரடங்கு சட்டக் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். ஜனாதிபதி இதற்கான விதிவிலக்குகளை பின்னைய கட்டளையொன்றினூடாக குறிப்பிடலாம் அல்லது அவ்விடத்தில் இருப்பதற்கானத் தேவையுள்ளவர்கள் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த அதிகாரிகளிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம். **(ஒழுங்குவிதி 14)**

- நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளிலும் அல்லது குறிப்பிட்ட சில பகுதிகளில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான வெளியீடுகளை அல்லது இலங்கையிலிருந்து இலங்கைக்கு வெளியே செய்யப்படுகின்ற ஒலிபரப்பினை, தகைமைவாய்ந்த அதிகாரிகளால் தடை செய்ய இயலும். அத்தகையக் கட்டளையானது அதிகாரிகளால் அவசியமானது அல்லது தகுந்தது என கருதுகின்ற சந்தர்ப்பங்களில், பாதுகாப்பு படையினரின் செயற்பாடுகள் தொடர்பான ஆவணங்கள், படங்கள், புகைப்படங்கள் மற்றும் திரைப்படச்சுருள்கள் மற்றும் ஒலிபரப்புக்கள் என்பனவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு செய்தி அறிக்கைகள், ஆசிரியர் கட்டுரைகள், ஆக்கங்கள், ஆசிரியர்களுக்கான கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள் மற்றும் கருத்துரைகள் உள்ளடங்கலான தகவல்கள் என்பன வெளியிடப்படுவதற்கு முன்னர் தகைமை வாய்ந்த அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்படுதல் அல்லது காண்பிக்கப்படுதல் வேண்டும் போன்ற தற்காலிக ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம். **(ஒழுங்குவிதி 15(1))**

- துணை பொலிஸ் கண்காணிப்பாளர் என்ற தரநிலைக்கு குறையாத பொலிஸ் உத்தியோகத்தர் எவரும் குடும்பத் தலைவர் தம் வீட்டிலுள்ளவர்களின் பட்டியலொன்றை (குடும்ப உறுப்பினர்களையும் வேலையாட்கள் மற்றும் வேறு வதிவாளர்களையும் வேறுபடுத்தியுள்ள ஒரு பட்டியல்) தரவேண்டும் எனத் கோரப்படலாம். குறிப்பிட்ட நபர் வழங்கப்பட்ட பட்டியலிலுள்ள நபர்களின் எண்ணிக்கையில் மாற்றம் (கூடுகின்றபோது அல்லது குறைகின்றபோது) ஏற்படுகின்றபோது அதனை அறிக்கையிட வேண்டுமென்றும் அல்லது அப்பிரதேச பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்காமல் புதிய நபரொருவருக்கு அடைக்கலம் வழங்கக்கூடாதென உத்தரவிடப்படலாம். **(ஒழுங்குவிதி 23)**

## 7. இவ் ஒழுங்குவிதிகள் ஊடகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்கள் யாவை?

பிரஜைகள் மேற்கொள்கின்ற வெளியீடுகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் மட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக, ஒழுங்குவிதி 15 ஆனது (வெளியீடுகள் மீதான கட்டுப்பாடு) ஊடகங்களின் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

ஒழுங்குவிதி 15(1) இனால் விதிக்கப்பட்டிருக்கின்ற மட்டுப்பாடுகள் (மேற்குறிப்பிடப்பட்டவை) ஏதேனுமொரு செய்திப்பத்திரிகையினால் மீறப்படுமாயின், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட எச்சரிக்கைகளை வழங்கியதன் பின்னர் தகைமை வாய்ந்த அதிகாரி அத்தகைய செய்திப்பத்திரிகையினை எந்தவொரு நபரும் அச்சிட, வெளியிட அல்லது விநியோகிக்கக்கூடாதென அல்லது அக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அத்தகைய எப்பணிகளிலும் ஈடுபடகூடாதென அல்லது அச்செய்திப்பத்திரிகை அச்சிடப்படுகின்ற அச்சகத்தினை

மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது எந்நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தக்கூடாதென கட்டளையிடலாம். **(ஒழுங்குவிதி 15(3))**

அதிகாரியின் அபிப்பிராயத்தின்படி தேசிய பாதுகாப்பின் அக்கறைக்கு, பொது ஒழுங்கைப் பேணுவதற்கு அல்லது சமுதாயங்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகள் மற்றும் விநியோகங்களைப் பேணுவதற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய அல்லது கலகம், கிளர்ச்சி அல்லது சிவில் குழப்பமொன்று ஏற்படுவதனை ஊக்கப்படுத்துகின்ற வெளியீடொன்று குறிப்பிட்ட ஒருபத்திரிகையில் வெளியாகியுள்ளது அல்லது வெளியாகின்றது அல்லது வெளியாகவுள்ளது என அதிகாரியொருவர் கருதுவாராயின் மேற்குறிப்பிட்ட அதே கட்டளைகளை அப்பத்திரிகை குறித்தும் வழங்குவதற்கு இயலும்.

மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைகள் தொடர்பான தம்முடைய ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கான ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆலோசனைக்குழுக்கள் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் **(ஒழுங்குவிதி 15(8))** தகைமைவாய்ந்த அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பத்திரிகையின் உரிமையாளர் மற்றும் அச்சகத்தின் உரிமையாளர் என்போர் தம்முடைய கருத்துக்களை நேரடியாக ஜனாதிபதிக்குத் தெரிவிப்பது சாத்தியமாகவுள்ளதென உறுதிப்படுத்துதல் வேண்டும் **(ஒழுங்குவிதி 18(9))**.

## 8. இவ் ஒழுங்குவிதிகளின்கீழ் தீர்மானமெடுக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ள அதிகாரிகள் யார்?

**தகைமைவாய்ந்த அதிகாரி**
எந்த அதிகார சபைகள் அதிகாரங்களைக் கொண்டுள்ளன என்பது வேறுபட்ட ஒழுங்குவிதிகளிடையே வேறுபட்டுக் காணப்படும். "தகைமைவாய்ந்த அதிகாரி" என்பதன் வரைவிலக்கணமானது "அத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழுள்ள நோக்கங்களுக்காக ஜனாதிபதியினால் தகைமை வாய்ந்த அதிகாரியாக செயற்பட வேண்டுமென ஜனாதிபதியினால் பெயர்மூலமாக அல்லது அலுவலகம் மூலமாக நியமிக்கப்பட்ட நபர்" என்பதாகும் **(ஒழுங்குவிதி 2(1))**. சில ஒழுங்குவிதிகளில் அவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக யார் பொருத்தமான தகைமைவாய்ந்த அதிகாரியாகக் கருதப்படமுடியமென குறிப்பிடப்பட்டிருக்கும், (உதாரணமாக ஒழுங்குவிதி 9(5)). ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றவர்களே தகைமை வாய்ந்த அதிகாரியாகக் காணப்படுவர். அதிகாரி நியமிக்கப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்கள் முழு நாட்டிற்குமான அல்லது நாட்டில் ஒருபகுதிக்கான அதிகாரிகளாக நியமிக்கப்படலாமென்பதுடன் அவர்கள் எந்நோக்கங்களுக்காக தகைமை வாய்ந்த அதிகாரிகளாக உள்ளனரோ அந்நோக்கங்களும் மட்டுப்படுத்தப்படலாம் **(ஒழுங்குவிதி 5(1))**.

**ஆலோசனை குழுக்கள்**
ஆலோசனைக் குழுக்களின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் வேறுபட்ட ஒழுங்குவிதிகளிடையே வேறுபட்டுக் காணப்படும். 15(2)(ஆ), 15(3) மற்றும் 15(7) ஆகியவற்றின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளையொன்றுடன் அதிருப்தியுறுகின்ற எந்தவொரு நபரும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நபர்களைக் கொண்டமைந்த ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆலோசனைக் குழுக்களில் தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாமென **ஒழுங்குவிதி 15(8)** கூறுகின்றது. "ஆலோசனைக் குழுக்கள்" எனத் தலைப்பிடப்பட்டுள்ள **ஒழுங்குவிதி 16** ஆனது, ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலுமுள்ள பிரதேச செயலாளர் பகிரங்க ஊழியர்கள், வர்த்தக சங்கங்களின் பதவிநிலை உறுப்பினர்கள் மற்றும் அச்சமுதாயத்தில் அங்கீகாரம் பெற்றுள்ள ஏனைய நபர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினை அப்பிரிவிற்காக நியமித்தல் வேண்டுமென கூறுகின்றது. அதேபோன்று, **ஒழுங்குவிதி 19(4)** இன்கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நபர்களை உள்ளடக்கிய

ஆலோசனைக் குழுவொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குவிதி 19(1) இன் கீழ் செய்யப்பட்டுள்ள தடுத்துவைப்பதற்கான கட்டளையினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் அக்குழுவிற்கு தனது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.

## 9. இவ் ஒழுங்குவிதிகளினூடாகக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய குற்றங்கள் யாவை?

அவசரகால ஒழுங்குவிதிகளின் பிரிவு V இனூடாக பல புதிய பரந்தளவான குற்றங்கள் மற்றும் தண்டனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒழுங்குவிதி 25 மற்றும் ஒழுங்குவிதி 45 இன் கீழான குற்றங்களுக்கு மரண தண்டனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமொன்றாகும். மக்களுடைய உரிமைகளின்மீது மிகையான தாக்கத்தினைச் செலுத்தத்தகு சில பரந்தளவான குற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

- **ஒழுங்குவிதி 25**
  - சொத்துக்களுக்கு அழிவு அல்லது சேதத்தினை ஏற்படுத்துகின்ற குற்றங்கள்
  - நெருப்பினால் அல்லது ஏதேனும் வெடி பொருட்கள்/ ஏவுகணை/ ஆயுதம் அல்லது உபகரணத்தினால் யாரேனுமொரு நபருக்கு இறப்பு அல்லது காயத்தை ஏற்படுத்தல் அல்லது ஏற்படுத்த முயற்சித்தல்
  - வெறுமையாக அல்லது பாதுகாப்பற்று விடப்பட்டுள்ள ஒரு வளாகத்திலிருந்து ஏதேனுமொரு பொருளைத் திருடுதல்
  - தண்டனை கோவையின் பிரிவு 427 முதல் 446 வரையான பிரிவுகளின் கீழான குற்றமொன்றை புரிதல்
  - குற்றவியல் கோவையின் பிரிவு 138 இன்படி சட்டமுரணான ஒன்றுகூடலின் அங்கத்தவரொருவராக இருத்தல்
  - குறிப்பிட்ட பொருட்கள் அல்லது பண்டங்கள் தொடர்பில் குற்றமொன்று இழைக்கப்பட்டுள்ளதென நம்புவதற்கான காரணங்கள் காணப்படுகின்றபோது அல்லது அவற்றை அறிந்துகொண்டு நேர்மையீனமாக அத்தகைய பொருட்களை வாங்குதல் அல்லது தம்மிடம் வைத்து கொள்ளுதல்

  மேற்குறிப்பிடப்பட்ட குற்றங்களுக்காக மேல் நிதிமன்றத்தின் முன்னிலையில் தண்டனைபெறுகின்ற எந்தவொரு நபரும் *மரண தண்டனையை* அனுபவித்தல் அல்லது ஆயள் தண்டனையை அனுபவித்தல் வேண்டும்.

- **ஒழுங்குவிதி 29**- தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு அல்லது பங்கம் விளைவிக்கின்ற எந்தவொரு தகவலையும் எந்தவொரு நபரும் வேறு எந்தவொரு நபரிடமோ/ குழுவிடமோ/ குழுக்களிடமோ அல்லது ஒழுங்கமைப்பொன்றிற்கோ கூறுதல் ஆகாது. இக்குற்றத்திற்கான தண்டனையாக ஐந்து தொடக்கம் பத்து வருடங்கள் வரையான சிறைதண்டனை வழங்கப்படும்.

- **ஒழுங்குவிதி 30**- பேச்சு/ எழுத்து/ பாடல்/ காட்சிப்படுத்தல்/ உருவமைப்படுத்தல்/ நடத்தை அல்லது வேறு செயல்களினால் இலங்கை அரசாங்கத்தை வெற்றிக் கொள்வது அல்லது வீழ்த்துவதற்கான அவசியம் அல்லது தேவை குறித்து வாதாடுதல்

- **ஒழுங்குவிதி 31**- பொது பாதுகாப்பு/ பொது ஒழுங்கு/ அத்தியாவசியமான சேவைகள் மற்றும் விநியோகங்களைப் பேணுதல் என்பனவற்றிற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள சுவரொட்டிகள் / துண்டு பிரசுரங்கள்/ விளம்பரத் துணுக்குகள் என்பனவற்றை பொதுமக்கள் பார்வையிடக்கூடிய இடங்களில் ஒட்டுதல் / பொதுமக்களுக்கு விநியோகித்தல்

- **ஒழுங்குவிதி 32-** பொது ஒழுங்கீனத்தை ஏற்படுத்தக்கூடிய வதந்திகளை வாய் மொழி மூலமாக அல்லது வேறு ஏதேனும் வழிமுறைகளினூடாக தொடர்பாடல் செய்தல்/ பகிர்தல்/ பரப்புதல்

- **ஒழுங்குவிதி 33-** இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய ஏதேனும் ஆவணத்தை அச்சிடும் அல்லது வெளியிடுதல் அல்லது தகவலைக் கொடுக்கும் அல்லது அதுபற்றி விமர்சிக்கும் அல்லது ஏதேனும் உருவக்குறிப்பு, புகைப்படம் அல்லது திரைப்படக்காட்சியை வெளியிடுதல்

- **ஒழுங்குவிதி 35 -** எவரேனுமொரு நபர் தான் பிழையானதென்று அறிந்த அல்லது அவ்விதம் நம்புவதற்கு நியாயமான காரணங்களுடைய கூற்றைக் கூறுதல் அல்லது தகவலைத் தெரிவித்தல்

- **ஒழுங்குவிதி 36-** சட்டப் படியான காரணமேதுமின்றி அரசாங்கத்தின் அல்லது பொதுக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அலுவலகம், ஒழுங்கமைப்பு, நிறுவனம் அல்லது தாபனத்தின் திட்டம், வரைபடம், சித்திரம், மாதிரிப்படம், அல்லது கோட்டுப்படத்தை அல்லது வேறு விபரங்களை அல்லது பொலிஸ் உறுப்பினரின் அல்லது ஆயுத படையினரின் பணித்திட்டங்கள் அல்லது விபரங்களை தமது கட்டுப்பாட்டில் அல்லது உடைமையில் வைத்திருத்தல்

- **ஒழுங்குவிதி 37-** எவரேனுமொரு நபர் சட்டப்படியான அதிகாரமின்றி அல்லது நியாயமான காரணமேதுமின்றி தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது ஒழுங்கிற்கு பாதகமாக இருக்கக்கூடிய அல்லது அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்ச்சியை அல்லது அவமதிப்பை ஊக்குவிக்கக்கூடிய அல்லது அரசாங்கத்தை வீழ்த்துவற்கான ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் வண்ணம் எவரேனும் நபரை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக தூண்டிவிடக்கூடிய ஏதேனும் எழுத்தை அல்லது குறிப்பைக் கொண்ட ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது பத்திரிகையைத் தமது உடைமையில் வைத்திருத்தல்

- **ஒழுங்குவிதி 45-** எவரேனுமொரு நபர் சட்டப்படியான அதிகாரமின்றி வேறெவரேனும் நபருக்கு இறப்பு, உடற்றீங்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றதான அல்லது இறப்பை அல்லது உடற்றீங்கை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துவதன் மூலம் அத்தகைய வேறு நபர் உறுப்பினராகவுள்ள ஏதேனும் அரசியல் கட்சியிலிருந்து அல்லது தொழிற்சங்கத்திலிருந்து விலகுமாறு தூண்டினால் அல்லது இறப்பை அல்லது உடற்றீங்கை ஏற்படுத்துவதாக அச்சுறுத்துவதன் மூலம் எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது ஏதேனும் அத்தியாவசிய சேவையைப் புரிவதில் ஈடுபட்டுள்ள நபரொருவரை அவரது கடமையை மீறி எதனையும் செய்யுமாறு அல்லது செய்யாது விடுமாறு தூண்டினால் மேல் நீதிமன்றத்தில் இடம்பெறும் விளக்க விசாரணைக்கு பின்னர் அந்நபர் _மரண தண்டனைக்கு_ உட்படுத்தப்படுவார்.

## 10. எப்போது ஒரு நபர் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் அடைத்து வைக்கப்படலாம்?

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியை நிலைநாட்டுவதற்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்துவதற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய செயல்களை எவரேனும் ஒருவர் செய்வதிலிருந்து தடுப்பது அல்லது இவ் ஒழுங்குவிதிகளின் 44 அல்லது 25 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுவதிலிருந்து தடுப்பது அவசியமென்று அபிப்பிராயப்படின் அத்தகைய நபரை கட்டுக்காவலில் வைக்குமாறு கட்டளையிடலாம். **(ஒழுங்குவிதி 19 (1))**

மேலும், இவ் ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கட்டளையினை எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்தவொரு காரணியின் அடிப்படையிலும் கேள்விக்குட்படுத்தமுடியாது. **(ஒழுங்குவிதி 19 (10))**

ஒழுங்குவிதி 19 (1) இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவர் பொலிஸ்மா அதிபரால் அதிகாரமளிக்கும் இடத்திலும் அவரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமையவும் அல்லது சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சிறைச்சாலையொன்றில் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 19 (3))**

## 11. இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் யார் ஒரு நபரைத் தடுத்து வைக்கலாம்?

பொலிஸ் அதிகாரி அல்லது இலங்கை இராணுவம், கடற்படை அல்லது விமானப் படையின் அதிகாரி **(ஒழுங்குவிதி 19 (2))**

## 12. இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு நபர் எவ்வளவு காலத்திற்குத் தடுத்து வைக்கப்படலாம்?

- இவ் ஒழுங்குவிதிகளின்கீழ் எந்தவொரு நபரும் கைது செய்யப்பட்டதிலிருந்து *தொன்னூறு நாட்களுக்கு* மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு அடைத்துவைக்கப்படலாம். அந்நபர் அக்காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் தகைமைவாய்ந்த நீதிமன்றமொன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அடைத்து வைக்கப்படாவிடின் அத்தொன்னூறு நாட்களின் முடிவில் அந்நபர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் விடுவிக்கப்படுதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 21 (2))**
- நபரொருவர் உச்சபட்சமாக *ஒரு வருட காலப்பகுதிக்கே* அடைத்து வைக்கப்படலாம். **(ஒழுங்குவிதி 19 (1))**

## 13. தடுத்து வைப்புக்கான கட்டளையொன்றினை ஆட்சேபிப்பதற்கான செயல்முறை யாது?

**ஒழுங்குவிதி 19(4)** இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆட்களைக் கொண்டுள்ள ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆலோசனைக் குழுக்களிடம் தனது ஆட்சேபிப்புக்களைத் தெரிவிக்கலாம். அத்தகைய ஆட்சேபிப்புக்கள் தொடர்பான அக்குழுவின் அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ் அறிக்கையினை ஆராய்வதன் அடிப்படையில் செயலாளர் குறிப்பிட்ட தடுத்து வைப்பதற்கான கட்டளையினை மீளப்பெற்றுக் கொள்ளவியலும். இவ் ஏற்பாடானது அத்தகைய ஆலோசனைக்குழுவிற்கு யார் நியமிக்கப்படலாம் அல்லது அவர்கள் தெரிவு செய்யப்படக்கூடிய முறை தொடர்பாக எவ்வித வழிகாட்டிகளையும் கொண்டிருக்கவில்லை என்பதனை குறித்துக் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

எந்த நபரிற்கெதிராக கட்டளையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதோ அந்நபர் தமது முறையீடுகளை எழுத்துமூலத்தில் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பதற்கான "நடைமுறை வாய்ப்புகள் நேரகாலத்தொடு அவருக்கு அளிக்கப்படுவதற்கான முயற்சியினை" மேற்கொள்ள வேண்டிய கடமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

எவ்வாறெனினும், எந்த நபரிற்கெதிராக கட்டளையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதோ அந்நபர் 75 ஆவது ஒழுங்குவிதியில் தடைசெய்யப்பட்டுள்ள ஒழுங்கமைப்பொன்றின் உறுப்பினரொருவராவார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எழுத்துமூலமாக அத்தாட்சிப்படுத்துகின்றபோது ஒழுங்குவிதிகள் 19(4), 19(5), 19(6), 19(7) மற்றும் 19(8) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட முடியாதனவாகும் **(ஒழுங்குவிதி 19(9))**.

## 14. ஒழுங்குவிதிகளின் கீழ் யாருக்கு தேடுவதற்கான, கையகப்படுத்துவதற்கான மற்றும் கைது செய்வதற்கான அதிகாரங்கள் உள்ளன?

எவரேனுமொரு பொலிஸ் அதிகாரி அல்லது இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை வான்படை என்பவற்றிலுமுள்ள யாரேனுமொரு உறுப்பினர் அல்லது இவ்வொழுங்குவிதியின் கீழ் செயலாற்றும்படி ஜனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாரேனுமொருவர் தேடுகை செய்யலாம், தேடுகை செய்வதற்காகத் தடுத்துவைக்கலாம் அல்லது இவ் அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிந்துள்ளதாக சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ள யாரேனும் நபரொருவரை, பிடியாணையில்லாமலே கைது செய்யலாம். மேலும் அக்குற்றம் புரிவதற்காக உபயோகிக்கப்பட்ட ஏதேனும் வாகனம், கப்பல், ஏதேனும் பொருட்கள் அல்லது பதார்த்தத்தைத் தேடுகை செய்யலாம், கைப்பற்றலாம், அகற்றலாம் அல்லது தடுத்து வைக்கலாம். **(ஒழுங்குவிதி 20 (1)).**

## 15. கைது செய்வதற்கான நடபடிமுறை யாது?

- கைது செய்யும் அலுவலகர் பொலிஸ் அலுவலகர் ஒருவரானால் கைது செய்தல் இடம்பெற்ற பிரிவின் பொலிஸ் கண்காணிப்பாளருக்கும், கைது செய்யும் அலுவலகர் ஆயுத படைகளின் உறுப்பினர் ஒருவரானால் கைது செய்தல் இடம்பெற்ற பிரதேசத்துக்கான கட்டளை அலுவலருக்கும் அக்கைது தொடர்பில் கைது செய்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் அறிக்கையிடுவது அவரது கடமையாதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 20 (8)).**

- கைது செய்யும் அதிகாரி செயலாளரினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்திலான முறையில் கைது செய்யும் நிகழ்வை ஏற்றுக்கொள்வதற்கான ஆவணமொன்றை வாழ்க்கைத் துணைக்கு, தந்தைக்கு, தாய்க்கு அல்லது வேறு எவரேனும் நெருங்கிய உறவினருக்கு வழங்குதல் வேண்டும். எவ்வாறெனினும், அத்தகைய ஆவணமொன்றை வழங்கமுடியாதவிடத்து, கைதுசெய்யும் அலுவலகர்கள், பொலிஸ் அலுவலகர் ஒருவராக இருந்தால் ஏன் அத்தகைய ஆவணமொன்றை அவ்வாறு வழங்க முடியவில்லை என்பதற்கான காரணங்களை தகவல் புத்தகத்தில் பதிவது அவரது கடமையாதல் வேண்டும். கைது செய்யும் அலுவலர் ஆயுதப் படைகளின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அத்தகைய ஆவணமொன்றை ஏன் வழங்க முடியவில்லை என்பதற்கான காரணங்களை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிக்கையிடுவது அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன அதனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தகவல் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 20 (9)).**

- எவரேனுமொரு நபர் நியாயமான காரணமில்லாமல் (9) ஆம் பந்தியில் தேவைப்படுத்தப்பட்டவாறாக கைது செய்தமையை ஏற்றுக்கொள்ளும் ஆவணமொன்றை வழங்கத் தவறுகின்றவிடத்து அல்லது ஆவணம் வழங்கப்படவில்லை என்ற நிகழ்வையும் அதற்கான காரணங்களையும் தகவல் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டுமென்றே தவறுகின்றவிடத்து அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு வருடங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனைக்கும் குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும். **(ஒழுங்குவிதி 20 (10)).**

- 19 ஆவது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள நபரொருவர் ஒவ்வொரு சம்பவத்தினதும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு நியாயமான ஒரு காலத்திற்குள், எவ்வாறெனினும் கைது செய்யப்பட்டு *முப்பது நாட்களுக்கு* பிந்தாமல் எவரேனும் நீதவான் முன்னிலைக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். அத்துடன் சட்டமா அதிபரின் எழுத்துமூலமான முன்னனுமதி பெற்றிருந்தாலொழிய அத்தகைய நபரெவரையும் நீதவான் பிணையில் செல்ல அனுமதிக்கலாகாது. **(ஒழுங்குவிதி 21 (1)).**

## 16. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் யாவை?

இவ் ஒழுங்குவிதிகள் சட்டமா அதிபரிற்கு பரந்தளவான அதிகாரங்களை வழங்கியுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில அதிகாரங்கள், குறிப்பாக சட்டமா அதிபரின் எழுத்துமூலமான முன்னனுமதி பெற்றிருந்தாலொழிய அத்தகைய நபரெவரையும் நீதவான் பிணையில் செல்ல அனுமதிக்கலாகாது என்ற அதிகாரம் நீதித்துறையின் அதிகாரங்களை பாரதூரமாக மீறுகின்றது. "சட்டமா அதிபர்" என்பது மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியை, மேலதிக மனறாடியார் தலைமையதிபதியை, சிரேஷ்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, பிரதி மன்றாடியார் தலைமையதிபதியை, சிரேஷ்ட அரச சட்டவுரைஞரை, அரச சட்டவுரைஞரை, அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகச் சட்டமா அதிபரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நபரை உள்ளடக்கும். **(ஒழுங்குவிதி 2 (1)).**

- சட்டமா அதிபரின் எழுத்துமூலமான முன்னனுமதி பெற்றிருந்தாலொழிய அத்தகைய நபரெவரையும் நீதவான் பிணையில் செல்ல அனுமதிக்கலாகாது. **(ஒழுங்குவிதி 21 (1)).**

- ஒழுங்குவிதி 59 இன் 9 ஆவது பந்தியின் கீழ் சட்டமா அதிபர் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட சான்றுப்பதிவேட்டினையும் வேறு ஆவணங்களையும் பெற்றுக் கொள்வாராயின்:

  (அ) அவருக்குத் தேவைப்படக் கூடியவாறான வேறு மேலதிக விடயங்களை அல்லது தகவலைக் கோருதல் வேண்டும்;

  (ஆ) ஏதேனும் தவறு புரியப்பட்டமை வெளிக்காட்டப்பட்டுள்ளதென அவர் திருப்திப்படின்-

  (i) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XIV ஆம் அல்லது XV ஆம் அத்தியாயங்களின் கீழ் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பணித்தல் அல்லது

  (ii) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 393 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டின் கீழ் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தல். **(ஒழுங்குவிதி 62)**

- (அ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதிக்கு எதிரான தவறொன்றுக்காக அல்லது

  (ஆ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கெதிரான குற்றமொன்றாக அமையும் செயல் அல்லது செய்யாமை நேரடியாகவாயினுஞ்சரி அல்லது மறைமுகமாகவாயினுஞ்சரி, இவ் ஒழுங்குவிதியின் கீழ் கூறப்பட்டுள்ள ஏதேனும் தத்துவம் அல்லது கடமை பிரயோகிக்கப்படுவதன் விளைவாக அல்லது அதினின்றெழுந்ததாக அல்லது பிரயோகிக்கப்படுகையில் புரியப்பட்டதாக கருதப்படுமிடத்து அக்குற்றத்திற்காக

  சட்டமா அதிபரின் எழுத்திலான சம்மதத்தால் அல்லது சம்மதத்துடன் தவிர நீதவான் நீதிமன்றத்தில் குற்றவழக்கெதுவும் தொடரப்படுதல் ஆகாது. **(ஒழுங்குவிதி 65)**

  மேலும், ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது ஆக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட ஏதேனும் கட்டளை அல்லது பணிப்பு தொடர்பில் சட்டமா அதிபரின் எழுத்திலான சம்மதத்துடன் அன்றி எவ்வித நடவடிக்கை அல்லது குடியியல் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கை ஏதும் தொடுக்கப்படலாகாது. **(ஒழுங்குவிதி 77)**

**17. குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்ட எத்தகைய வாக்குமூலங்கள் சான்றுகளாக ஏற்கப்படும்?**

அவசரகால ஒழுங்குவிதியொன்றின் கீழான தவறொன்றுக்காக எவரேனுமொரு நபரை விளக்கத்திற்கு உட்படுத்துகையில் அத்தகைய நபரினாற் செய்யப்பட்ட வாக்குமூலமொன்று, அது குற்ற ஒப்புதலொன்றாகவிருந்தாலுஞ் சரி, இல்லாவிடினுஞ்சரி, அத்தகைய நபர், அக்கூற்றை அளித்த நேரத்தில் பொலிஸ் அலுவலரொருவரின் கட்டுக்காப்பில் இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, அல்லது அத்தகைய வாக்குமூலமானது நீதவானொருவரின் முன்னிலையில் அளிக்கப்பட்டாலுஞ் சரி, இல்லாதுவிடினுஞ்சரி, அவ்வாக்குமூலம் அத்தகைய நபருக்கெதிராக நிரூபிக்கப்படலாம் என **ஒழுங்குவிதி 67(1)** கூறுகின்றது.

எவ்வாறெனினும், தூண்டல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி என்பவற்றினூடாகப் பெறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் இயைபற்றன என கூறுகின்ற சான்று கட்டளைச்சட்டத்தின் பிரிவு 24 இன் கீழ் அத்தகைய வாக்குமூலங்கள் இயைபற்றதொன்றாக இல்லாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே அவை ஏற்புடையதாகும். அத்துடன் உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறைந்த பதவியிலுள்ள பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு அத்தகைய வாக்குமூலம் அளிக்கப்பட்டிருப்பின் அத்தகைய வாக்குமூலத்தினை அந்நபருக்கெதிராக எண்பிக்க முடியாது. ஏதேனும் வாக்குமூலம் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் இயைபானதல்லவென எண்பிக்கும் பொறுப்பு அது இயைபானதல்லதென அழுத்திக் கூறும் நபரைச் சார்ந்தது ஆகும். (**ஒழுங்குவிதி 67(3)**)

**18. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் எவ்வாறு ஒழுங்கமைப்புக்கள் தடை செய்யப்படலாம்?**

(அ) தேசிய பாதுகாப்புக்கு பொது அமைதி பேணுதலுக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளை நடாத்திவருதலுக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கங்களுக்காக அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் 44 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (ஆ) உப பந்தியில் அல்லது 25 ஆம் ஒழுங்குவிதியின் (அ) முதல் (எ) முதலான உபபந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கங்களுள் எதற்காகவேனும்,

ஒழுங்கமைப்பின் நடவடிக்கை பயன்படுத்தப்படுவதற்கான அல்லது அவ்வொழுங்கமைப்பை அல்லது அதன் உறுப்பினர்களை மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கான ஆபத்துண்டென ஜனாதிபதி அபிப்பிராயப்படுமிடத்து அவர் வர்த்தமானியில் கட்டளையொன்றை வெளியிடுவதன் மூலமாக அத்தகைய ஒழுங்கமைப்பு தடைசெய்யப்பட்டதாக வெளிப்படுத்தலாம் என ஒழுங்குவிதி 75(1) கூறுகின்றது.

**19. இவ் அவசரகால ஒழுங்குவிதிகள் ஏதேனுமொரு சுயாதீனமான அதிகாரசபையினால் இவ் ஒழுங்குவிதிகளை மேற்பார்வை அல்லது கண்காணிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளனவா?**

இல்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற எந்தவொரு சுயாதீன அதிகார சபையும் ஒழுங்குவிதிகளை மேற்பார்வை செய்வதற்கான எந்தவொரு ஏற்பாடும் உள்ளடக்கப்படவில்லை.